**செய்தி வெளியீடு எண்: 194** **நாள்: 07.03.2020**

**இன்று (7.3.2020) நாகப்பட்டினத்தில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி அடிக்கல் நாட்டு விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை:**

**மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்கி,**

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்ச்சியில்
பங்கு கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**சிறப்புரை** ஆற்றிய
மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்
**திரு. ஓ.எஸ்.மணியன்** அவர்களே!

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை
அமைச்சர் **டாக்டர். சி.விஜயபாஸ்கர்** அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

மாண்புமிகு சட்டப் பேரவை துணைத் தலைவர்
**திரு. பொள்ளாச்சி வி.ஜெயராமன்** அவர்களே!

மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா
**திரு. எஸ்.ராஜேந்திரன்** அவர்களே!

மாண்புமிகு தமிழ்நாடு அரசின் புதுதில்லிக்கான சிறப்புப் பிரதிநிதி **திரு. என்.தளவாய் சுந்தரம்** அவர்களே!

மாண்புமிகு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் **திருமதி. பா.வளர்மதி** அவர்களே!

மாண்புமிகு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர்
**திரு. பி.கே.வைரமுத்து** அவர்களே!

மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே !

**வரவேற்புரை** ஆற்றிய மக்கள் நல்வாழ்வு மற்றும்
குடும்ப நலத் துறையின் அரசுச் செயலாளர்
**டாக்டர் திருமதி. பீலா ராஜேஷ்** அவர்களே!

முன்னாள் அமைச்சர் பெருமக்களே!

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே !

மரியாதைக்குரிய உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

மரியாதைக்குரிய கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே!

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

பெரியோர்களே, தாய்மார்களே!

**நன்றியுரை** ஆற்றவுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்
**திரு. பிரவீன் பி.நாயர்** அவர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசின் சேவைகள் மக்களுக்கு எளிதில் கிடைக்கும் பொருட்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் **1991**ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் **18**ஆம் நாள் தஞ்சாவூர் மாவட்டத்தில் இருந்து பிரித்து புதிய நாகப்பட்டினம் மாவட்டத்தை உருவாக்கி தந்த பெருமை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை சாரும் என்று இந்த நிகழ்ச்சியின் வாயிலாக குறிப்பிட விரும்புகின்றேன்.

வீரம், விவேகம், மொழிப்பற்று, தேசப்பற்று, ஆன்மீகம், சமய நல்லிணக்கம், இயல், இசை, நாட்டியம், விவசாயம், மீன் வளம் என பல வகை சிறப்புகளை தன்னகத்தே கொண்டது தான் நாகை மாவட்டமாகும். இம்மாவட்டம் முற்காலச் சோழர்களின் பன்னாட்டு வணிக மையமாகவும், சிறந்த துறைமுகமாகவும் விளங்கியது. சங்க காலத் தமிழர்கள் "**நாவாய்**" என்னும் கப்பல்களை பயன்படுத்தி, கடல் கடந்து வெளி நாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்து வந்ததில் வல்லவர்கள். இதனால் இந்த ஊரினை நாவல்பட்டினம் என்று அழைத்தார்கள். இதுதான் பின்னாளில் நாகப்பட்டினமாக மருவியது.

இந்த மாவட்டத்தில் அமைந்துள்ள காவிரி பூம்பட்டினம் என்ற **பூம்புகார் துறைமுகம்** ஒரு காலத்தில் பன்னாட்டு வணிக மையமாகத் திகழ்ந்தது. வணிகத்திற்காக டச்சுக்காரர்களால் அமைக்கப்பட்ட '**டேனிஷ்**' கோட்டையும், முதல் அச்சுக்கூடம் அமைந்த **தரங்கம்பாடியும்** இந்த மாவட்டத்தில் தான் உள்ளது.

'**தமிழிசை மூவர்**' என்று இசை உலகமும், இலக்கிய உலகமும் போற்றும் சீர்காழி அருணாசலக் கவிராயர், முத்துத் தாண்டவர், மாரிமுத்தாப் பிள்ளை ஆகிய மூவரும்

வாழ்ந்தது சீர்காழியில் தான். தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை **மறைமலை அடிகளார்** அவர்களும், தமிழில் புதின இலக்கியத்தை முதன்முதலில் அறிமுகம் செய்த நீதியரசர் **மாயூரம் வேதநாயகம் பிள்ளை** அவர்களும் பிறந்த மாவட்டம் இந்த நாகப்பட்டினம் மாவட்டம்.

'**தேசப்பிதா**' மகாத்மா காந்தியடிகளுடன், தென்னாப்பிரிக்காவில் போராட்டங்களை மேற்கொண்ட **தில்லையாடி வள்ளியம்மை** பிறந்த தில்லையாடி, இந்த மாவட்டத்தில் தான் உள்ளது. இங்கு அவருக்கு **ஒரு நினைவு மண்டபம்** அமைக்கப்பட்டுள்ளது. மகாத்மா காந்தியடிகள், உப்பு சத்தியாகிரகம் செய்ய, தண்டி யாத்திரை தொடங்கிய போது, **மூதறிஞர் ராஜாஜி தலைமையில்** பல்லாயிரக்கணக்கான மக்கள் உப்புச் சத்தியாகிரகம் செய்த **வேதாரண்யம்,** இந்த மாவட்டத்தில்தான் உள்ளது.

'**ஆயிரம் ஆனாலும் மாயூரம் ஆகாது**' என்ற பழமொழியுடன் சிறப்புற்று விளங்கும் ஆன்மிக நகரமாகத் திகழும் மாயூரம் என்றழைக்கப்படும் மயிலாடுதுறை இந்த மாவட்டத்தில்தான் உள்ளது. அதற்குக் காரணம், ஐப்பசி மாதத்தில் மாயவரம் துலா கட்டக் காவேரியில் புனித நீராடினால் கிடைக்கும் புண்ணியம், ஆயிரம் வருடங்கள் கங்கையில் நீராடினால் கிடைக்கும் புண்ணியத்திற்குச் சமம் என்று சான்றோர்கள் கூறுவார்கள்.

இந்துக்கள், கிறிஸ்துவர்கள் மற்றும் இஸ்லாமியர்கள் என அனைத்து சமயத்தினரும் சகோதார உணர்வுடன் வாழும் ஒரு அற்புதமான மாவட்டம் நாகை மாவட்டம். உலகப் புகழ் பெற்ற வேளாங்கண்ணி மாதா கோயில், நாகூர் ஆண்டவர் தர்கா, வைத்தீஸ்வரன் கோயில், திருக்கடையூர் அபிராமி அம்மன் கோயில், சிக்கல் சிங்காரவேலர் கோயில் என பல பாடல் பெற்ற திருத்தலங்களைக் கொண்ட பூமி இந்த நாகப்பட்டினம் பூமி. மும்மதங்களின் சங்கமமாகவும், மத நல்லிணக்கத்திற்கு அடையாளமாகவும் திகழும் மாவட்டம் நாகப்பட்டினம் மாவட்டம்.

விவசாயத்தையும், மீன்பிடி தொழிலையும் முதன்மைத் தொழில்களாகக் கொண்டு நீர் வளம், நில வளம், கடல் வளம் என அனைத்தையும் ஒருங்கே பெற்ற உன்னத மாவட்டம் இந்த நாகை மாவட்டம்.

வேளாண் பெருமக்களின் வாழ்வில் பெரிதும் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு, இந்த மாவட்டத்தை உள்ளடக்கிய டெல்டா மாவட்டங்களை "**பாதுகாக்கப்பட்ட காவேரி டெல்டா வேளாண் மண்டலமாக ஒரு தனிச் சட்டத்தினை**" இயற்றி, வரலாற்றில் இடம் பிடித்துள்ளது எங்களுடைய அரசு.

இச்சட்டத்தின்படி, இந்தப் பகுதியில்

- துத்தநாக உருக்காலை
- இரும்புத் தாது செயல்முறை ஆலை, ஒருங்கிணைந்த எஃகு ஆலை,
- செம்பு உருக்காலை
- அலுமினியம் உருக்காலை
- விலங்குகளின் எலும்பு, கொம்பு, குளம்புகள் மற்றும் பிற உடல் பாகங்களை பதப்படுத்துதல்,
- தோல் பதனிடுதல்
- எண்ணெய் மற்றும் நிலக்கரி படுகை மீத்தேன், மென்களிக்கல் எரிவாயு மற்றும் பிற ஒத்த ஹைட்ரோகார்பன்கள் உள்ளடங்கிய இயற்கை வாயுக்களின் ஆய்வு, துளைத்தல் மற்றும் பிரித்தெடுத்தல்,
- கப்பல் உடைக்கும் தொழிற்சாலை

போன்ற திட்டங்கள் புதிதாகத் துவங்க காவேரி டெல்டா மாவட்டங்களில் இனி முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளன என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

மீனவர்கள் நலனைப் பேணவும், மீன்பிடிப்பிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு மீன் வளத் துறையில் பெரிய முதலீடுகளை மாண்புமிகு அம்மாவின் அரசு செய்து வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவிக்க விரும்புகின்றேன்.

மீன்பிடி தொழில் மற்றும் மீனவர்கள் நலனுக்காக நிறைவேற்றப்படும் பல திட்டங்களை இந்த மாவட்டத்தின் மண்ணின் மைந்தர் மாண்புமிகு அமைச்சர் திரு.ஓ.எஸ். மணியன் அவர்கள் குறிப்பிட்டார், நானும் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

- மீன்பிடி தடை காலம் மற்றும் மீன்பிடி குறைவு காலங்களில், மீனவர்களுக்கு உதவித் தொகை வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு.

- ஆழ்கடலில் மீன் பிடிக்கும் மீனவர்களின் பாதுகாப்பிற்காக தமிழ்நாட்டிலுள்ள மின்விசை படகுகளில் VHF, நேவிக், டிரான்ஸ்பாண்டர்கள் மற்றும் செயற்கைக் கோள் கருவிகள் பொருத்தப்பட்டு வருகின்றன.

- பாக் வளைகுடா பகுதி மீனவர்களுக்காக, 2 ஆயிரம் இழுவலை மீன்பிடி படகுகளை ஆழ்கடல் மீன்பிடி படகுகளாக மாற்றிடும் சிறப்புத் திட்டம் ஆயிரத்து 600 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் முதற்கட்டமாக 500 தூண்டில் மற்றும் செவுள் வலையுடன் கூடிய ஆழ்கடல் சூரை மீன்பிடி படகுகள் கட்டப்பட்டு வருகின்றன. இவை மீனவர்களின் நலனுக்காக எங்களுடைய அரசு எடுத்த நடவடிக்கைகள் ஆகும்.

- 100 விசைப் படகுகள், 500 நாரிழைப் படகுகள் நிறுத்த வசதியாக சுமார் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 10 ஆயிரம் மீனவர்கள் பயன் பெறும் வகையில், ஒரு புதிய துறைமுகம் நாகப்பட்டினம் மாவட்டம் ஆறுகாட்டுத்துறை கிராமத்தில் நிறுவுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விரைவில் இந்தப் பணி துவங்கப்படும். இங்கிருக்கின்ற மீனவ நண்பர்கள், மாண்புமிகு அமைச்சர், சட்டப்பேரவை உறுப்பினர்கள் கோரிக்கையை ஏற்று இந்தத் திட்டம் எங்களுடைய அரசால் விரைவில் நிறைவேற்றப்படும் என்ற செய்தியை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவிக்க விரும்புகின்றேன். இதனால், ஆற்காட்டுத்துறை, புஷ்பவனம், கோடியக்கரை, காடியங்காடு போன்ற பகுதி மீனவர்கள் மிகவும் பயன் பெறுவார்கள்.

இதுபோன்ற எண்ணற்ற பல திட்டங்களை மீனவர்களுக்காக மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது.

எந்த மாநிலத்தில் கல்விக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறதோ, அந்த மாநிலம் பொருளாதார மேம்பாடு, அமைதியான சூழ்நிலை உட்பட அனைத்து குறியீடுகளிலும் முன்னணி மாநிலமாகத் திகழும். ஆகவே மாண்புமிகு அம்மாவின் அரசு, பள்ளிக் கல்வி மட்டுமல்லாது, கலை மற்றும் அறிவியல் கல்வி, பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி, சட்டம் மற்றும் மருத்துவக் கல்வி என அனைத்து வகையான உயர் கல்விக்கும் போதுமான நிதி ஒதுக்கீடு அளித்து பல திட்டங்களை இன்றையதினம் செயல்படுத்தி வருகிறது. இதனால் உயர் கல்வியில் சேரும் மாணாக்கர்களின் எண்ணிக்கையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

அந்த வகையில், மருத்துவக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் பொருட்டு, குறுகிய காலத்தில் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளை துவக்க மத்திய அரசிடமிருந்து ஆணை பெற்று மிகப்பெரிய சரித்திர சாதனையை தமிழ் மண்ணில் படைத்தள்ள அரசு எங்களுடைய அரசு. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு அரசு மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டும் என்பது இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனவாக இருந்தது, அதை எங்களுடைய அரசு நனவாக்கி வருகிறது. அதை நிறைவேற்றும் வகையிலும், ஏழை, எளிய மாணாக்கர்களின் மருத்துவக் கல்வி கனவினை நனவாக்கும் வகையிலும், இந்த மாவட்டத்தில் ஓரத்தூர் என்ற இடத்தில் சுமார் 24 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்க மத்திய அரசிடமிருந்து ஆணை பெற்றுத் தந்துள்ளது மாண்புமிகு அம்மாவின் அரசு என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

“**மருத்துவம் என்பது ஒரு நுண்கலையாகும், வணிகமல்ல. மக்களின் சேவைக்கான மனப்பூர்வமான அழைப்பாகும். இதயமும், மூளையும் ஒருமித்து பயணிக்கும் உன்னதமே மருத்துவம் ஆகும்**” என்ற மேலை நாட்டு அறிஞர் ஒருவரின் கருத்தை மேற்கோள் காட்டினார் நமது மாண்புமிகு அம்மா அவர்கள். அதற்கேற்ப, அனைத்து தரப்பினருக்கும் உலகத் தரம் வாய்ந்த உயர்ந்த மருத்துவ சிகிச்சை கிடைக்கும் வகையில், மாண்புமிகு அம்மாவின் அரசு ஆற்றியுள்ள மக்கள் பணிகள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- **உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில்** இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. இதற்காக கடந்த **5 ஆண்டுகளாக இந்தியாவில் முதன்மை மாநிலமாக இருந்து தொடர்ந்து 5 முறை தேசிய விருதை பெற்ற அரசு நம்முடைய அரசு.**

- புற்று நோய்க்கு உயரிய சிகிச்சை அளிக்கும் வகையில் 190 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 அரசு மருத்துவமனைகளில் Linear Accelerator என்ற உயர் தொழில்நுட்பக் கருவி நிறுவப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன். ஏழை, எளிய மக்கள் பல லட்சம் ரூபாய் செலவு செய்து தனியார் மருத்துவமனைகளில் புற்றுநோய்க்கான உயர்தர சிகிச்சை பெற முடியாத நிலையை மாற்றி, இந்தக் கருவி மூலம், அரசு மருத்துவமனைகளில் இலவசமாக சிகிச்சை அளித்து குணப்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலை எங்களுடைய அரசால் உருவாக்கப்பட்டு வருகிறது.

- கிராமப்புற மக்களுக்கு அரசின் சுகாதார சேவைகள் தங்கு தடையின்றி கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், கடந்த 8 ஆண்டுகளில் மட்டும் புதியதாக 254 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவக்கப்பட்டு உள்ளன. நாகப்பட்டினம் மாவட்டத்தைப் போல பல்வேறு மாவட்டங்கள் கிராமங்கள் சூழ்ந்த மாவட்டங்களாக தமிழகத்திலே இருக்கின்றன. கிராமத்திலே வாழ்கின்ற மக்களுக்கு, ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்து வாழ்கின்ற மக்களுக்காக 254 அரசு ஆரம்ப சுகாதார நிலைங்களை துவக்கி அந்தந்தப் பகுதிகளிலே சிகிச்சை அளிக்கக்கூடிய சூழ்நிலையை எங்களுடைய அரசு உருவாக்கித் தந்துள்ளது. அதேபோல, கிராமப்புற மக்களின் நலன் காக்க எங்களுடைய அரசு அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்தி, 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட மருத்துவமனையாக உருவாக்கி இருக்கிறது. அதில், கூடுதலாக புதிய மருத்துவர்கள் நியமிக்கப்படுகின்றனர். அங்கே அறுவை சிகிச்சையும் அளிக்கப்படுகிறது.

- சென்னை **அடையாறு, புற்றுநோய் மையத்தில்** 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில அளவில் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கும் **ஒப்புயர்வு மையமாக தரம் உயர்த்தும் பணி** தற்போது முடியும் தருவாயில் உள்ளது. இதுவும் மாண்புமிகு அம்மாவின் அரசு ஏழை, எளிய மக்கள் புற்றுநோயிலிருந்து விடுபடுவதற்காக இவ்வளவு தொகையை ஒதுக்கீடு செய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இருக்கின்றது.

- 59 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி அரசு மருத்துவ மனைகளில் **நான்கு புற்றுநோய் மண்டலங்கள்** ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- தமிழ்நாட்டில் உள்ள கடைக்கோடி மக்கள் வரை அனைவருக்கும் அரசின் மருத்துவ சேவை கிடைக்க வேண்டும் என்ற காரணத்தால், கடந்த 8 ஆண்டுகளில் சுமார் 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவர்கள் மாண்புமிகு அம்மாவின் அரசால் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதனால் மருத்துவப் பணியிடங்களே காலி இல்லை என்ற நிலையை அடைந்துள்ளோம்.

இந்த மாவட்டத்தில் நடைபெற்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் நான் பல்வேறு புதிய அறிவிப்புகளை வெளியிட்டேன். அதில் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற பலவற்றைக் குறித்த செய்தியை இந்த நேரத்தில் உங்களுக்குத் தெரிவிக்கின்றேன்.

நாகப்பட்டினத்தில் உள்ள மீன்வளப் பல்கலைக் கழகத்திற்கு அம்மாவின் திருநாமத்தின் பெயரில் **தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகம்** என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதேபோல், தலைஞாயிறு மீனவ கல்லூரிக்கு **டாக்டர் எம்.ஜி.ஆர். மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்** என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது தவிர, இந்த மாவட்டத்தில் மாண்புமிகு அம்மாவின் அரசால் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் எண்ணிலடங்கா. அவற்றில் ஒரு சிலவற்றை பற்றி மட்டும் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

ஏனென்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்கள் இந்த ஆட்சியில் ஒன்றுமே நடைபெறவில்லை, மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை என்ற தவறான, பொய்யான, அவதூறான பிரச்சாரத்தை செல்லும் இடங்களில் எல்லாம் பரப்பி வருகிறார். அதற்கு பதில் அளிக்கின்ற விதத்திலே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, மக்களின் குறைகளை அறிந்து, அதைக் களைவதற்காக நிறைவேற்றி வருகின்ற திட்டங்களை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- குடிமராமத்து திட்டம் ஒரு அற்புதமான திட்டம். விவசாயப் பெருங்குடி மக்களின் கனவுத் திட்டம் என்று சொன்னால் அது குடிமராமத்துத் திட்டம் தான் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாவட்டத்தில் மட்டும் **81** பணிகள், சுமார் **13 கோடியே 27லட்சம் ரூபாய்** மதிப்பீட்டில் விவசாய பெருங்குடி மக்களின் முழு ஒத்துழைப்போடு, முழு பங்களிப்போடு நிறைவேற்றப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் வாய்க்கால்களும், ஏரிகளும், குளங்களும், ஊரணிகளும் சரியான நேரத்தில் தூர்வாரப்பட்டதாலும், இயற்கையும் கைகொடுத்து நல்ல பருவமழை பெய்ததாலும், டெல்டா மாவட்டங்களில் மட்டும் கூடுதலாக சுமார் 2 லட்சத்து 30 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

- கிராமம் மற்றும் நகரங்களில் வாழ்கின்ற ஏழை மக்கள் தங்கள் பிரச்சனைகளுக்காக அரசு அலுவலகங்களுக்குச் சென்று மனுக்கள் கொடுக்க வேண்டிய நிலையை மாற்றி, மக்கள் வசிக்கும் இடங்களுக்கு அதிகாரிகளே நேரில் வந்து, மக்களிடம் மனுக்களைப் பெற்று, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் சமர்ப்பித்து, துறைவாரியாகப் பிரித்து, துறைகள் மூலம் நடவடிக்கை எடுக்கின்ற திட்டம் தான் மூன்று மாதங்களுக்கு முன்பு நான் அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டம் ஆகும். இத்திட்டத்தின் மூலம் இம்மாவட்டத்தில் **4 ஆயிரத்து 671** மனுக்களின் மீது தீர்வு காணப்பட்டு சாதனை படைத்துள்ள அரசாக எங்களுடைய அரசு விளங்கிக் கொண்டிருக்கிறது. ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்கள், வயது முதிர்ந்தவர்கள், உழைக்கும் திறனற்ற முதியோர்களுக்கு மாதந்தோறும் ரூபாய் 1000 ஒய்வூதியம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை வைத்துக் கொண்டிருந்தார்கள். தமிழ்நாடு முழுவதும் 234 தொகுதிகளில் இருக்கின்ற மக்களும் கோரிக்கை வைத்தார்கள். அந்தப் பெரியவர்களுக்கும், வயதானவர்களுக்கும் எங்களுடைய அரசு கனிவோடு பரிசீலித்து சுமார் 5 லட்சம் முதியோர்களுக்கு மாதந்தோறும் ரூபாய் 1000 ஒய்வூதியம் வழங்கப்படுமென்ற அறிவிப்பை நான் வழங்கினேன். அந்த அறிவிப்பின்படி, இந்த மாவட்டத்தில் புதிதாக **1,805 நபர்களுக்கு மாதாந்திர ஒய்வூதியம்** வழங்கப்பட்டு வருகிறது. தகுதியான முதியோர்கள் இருந்து விடுபட்டுப் போயிருந்தால் நீங்கள் வட்டாட்சியர் அலுவலகத்திலோ, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே, உங்கள் பகுதியில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திலோ மனு கொடுத்தால் அரசு அதனை பரிசீலித்து விடுபட்ட முதியோர்களுக்கும் ஒய்வூதியம் வழங்க எங்களுடைய அரசு துணை நிற்கும்.
- வளர்ந்து வரும் தகவல், தொழில்நுட்பங்களை மாணவ, மாணவியர்களுக்கு வழங்கும் வகையில், **20 ஆயிரத்து 434** மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. வளர்ந்து வருகின்ற வல்லரசு நாடுகளில்கூட விலையில்லா மடிக்கணினி கொடுப்பது கிடையாது. ஆனால், நம்முடைய மாணவச் செல்வங்கள் திறமையானவர்கள். ஏழைக் குடும்பத்தில் பிறந்த காரணத்தினால், பொருளாதார சூழ்நிலை காரணமாக மடிக்கணினி வாங்க

முடியாத சூழ்நிலை இருப்பதினால், அவர்கள் அறிவுப்பூர்வமான, விஞ்ஞானப்பூர்வமான கல்வி கற்று, எதிர்காலத்தில் திறமையான மாணவச் செல்வங்களாக உயர வேண்டுமென்பதற்காக, இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு மாணவருக்கும் ரூபாய் 12 ஆயிரம் மதிப்புள்ள மடிக்கணினியை விலையில்லாமல் வழங்கும் அற்புதமான திட்டத்தை தொலைநோக்குச் சிந்தனையோடு நடைமுறைப்படுத்தினார்கள். இம்மாவட்டத்தில் மட்டும் 20 ஆயிரத்து 434 மாணவச் செல்வங்கள் மடிக்கணினிகளை பெற்றுள்ளனர். இத்திட்டத்தை எங்களுடைய அரசு தொடர்ந்து நடைமுறைப்படுத்தி சாதனைகள் மேல் சாதனைகள் படைக்கின்ற அரசாக திழ்ந்து கொண்டிருக்கிறது.

- **15 கோடியே 66 லட்சம் ரூபாய்** மதிப்பீட்டில், பராமரிப்பில் உள்ள கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கு மறு சீரமைப்புப் பணிகள் இம்மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபொழுது, ஏழை, எளிய மக்கள் தனியார் மருத்துவமனைக்குச் சென்று மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக சிகிச்சை பெற 2 லட்சம் ரூபாய் என்று இருந்ததை அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அரசு, அதனை 5 லட்சமாக உயர்த்திக் கொடுத்திருக்கின்றது.

- டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவி, முதலில் ரூபாய் 6 ஆயிரமாக இருந்த நிதி உதவியை அம்மா அவர்கள் தேர்தல் வாக்குறுதியின்படி, ரூபாய் 12 ஆயிரமாக உயர்த்தினார்கள். மீண்டும் 2016 சட்டமன்ற பொதுத் தேர்தலின்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய தேர்தல் அறிக்கையாக, நான் மீண்டும் முதலமைச்சரானால் 12 ஆயிரம் ரூபாயாக இருப்பதை 18 ஆயிரமாக உயர்த்தப்படும் என்று அறிவித்தார்கள். அம்மா அவர்கள் மறைந்தாலும்,

அம்மாவினுடைய அரசு அதை நிறைவேற்றி, இந்த மாவட்டத்தில் மட்டும் **13 ஆயிரத்து 352** கர்ப்பிணிப் பெண்களுக்கு எங்களுடைய அரசால் மகப்பேறு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- ஏழை, எளிய தாய்மார்கள் பெற்றெடுக்கும் குழந்தைகள் வளமோடு, சிறப்போடு, சுகாதாரத்தோடு வாழ வேண்டுமென்பதற்காக இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த உன்னதமான திட்டம் தான் அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம் திட்டம் ஆகும். இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் அரசு மருத்துவமனைகளில் பிறந்த **4 ஆயிரத்து 233** குழந்தைகளுக்கு 16 பொருட்கள் அடங்கிய ‘‘**அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம்**’’ வழங்கப்பட்டுள்ளன.

- மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் **97 ஆயிரத்து 906** குறு, சிறு விவசாயிகளுக்கு **461 கோடியே 74 லட்சம் ரூபாய்** பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளன.

- இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெண்கள் மீது அதிக அக்கறை கொண்டவர்கள். ஆகவே, பெண்கள் சுயமாக தொழில் செய்து, சொந்தக் காலில் நின்று, அவர்களும் அவர்களின் குடும்பமும் சிறப்பாக வாழ வேண்டும் என்ற தொலைநோக்குச் சிந்தனையோடு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மனதில் உதித்த திட்டம் மகளிர் சுய உதவிக் குழுக்களாகும். அவைகள் இன்றைக்கு அற்புதமாக செயல்பட்டு வருகின்றன. இந்த மாவட்டத்தில் மட்டும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு **699 கோடியே 51 லட்சம் ரூபாய்** வங்கிக் கடன், வேலைவாய்ப்பு முகாம் மூலம் **20 ஆயிரத்து 553** நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு, **716** சுய உதவிக் குழு பெண்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

- இந்த விழாவில் அனைத்து மகளிர்க்கும் மகளிர் தின வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவிலேயே பெண்களுக்காக அதிகத் திட்டங்களை உருவாக்கித் தந்து, அதன் மூலம்

பெண்கள் அதிகம் பயன்பெற்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு தான். அந்தப் பெருமைக்குரியவர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். ஏழைப் பெண்களுக்கு திருமண உதவித் திட்டத்தை அம்மா அவர்கள் சிறப்பாக செயல்படுத்தி, இன்று எங்களுடைய அரசு அதைத் தொடர்ந்து சிறந்த முறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. ஏழைப் பெண்களுக்கு தலா 8 கிராம் தாலிக்குத் தங்கம் மற்றும் திருமண நிதி உதவியாக ரூபாய் 25 ஆயிரம், ரூபாய் 50 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் இம்மாவட்டத்தில் மட்டும் **7 ஆயிரத்து 750** பயனாளிகள் பயன் பெற்றுனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்பிகிறேன்.

- பருவ காலங்களில் பொழிகின்ற மழைநீர் மேட்டூர் அணையில் நிரம்பி உபரியாக கடலில் கலக்கின்ற நீரை சேமித்து வைத்து, கோடைக் காலத்தில் விவசாயத்திற்கும், குடிப்பதற்கும் உபயோகப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நாகப்பட்டின விவசாயப் பெருங்குடி மக்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஆதனூர், குமாரமங்கலம் கிராமங்களுக்கு இடையே மதகுகளுடன் கூடிய கதவணை சுமார் 428 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றது. இப்பணிகள் முடிவடைந்தால், அருகில் உள்ள சுமார் 50 கிராமங்களில் நிலத்தடி நீர்மட்டம் உயர்வதோடு, சுமார் 30 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயன் பெறும்.

- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் சுமார் 105 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நாகப்பட்டினம் மாவட்டத்தில் சீர்காழி, கொள்ளிடம், செம்பனார்கோயில் மற்றும் மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 295 குடியிருப்புகளுக்கும் மற்றும் 315 வழியோர குடியிருப்புகளுக்கான சுமார் 3.40 லட்சம் மக்கள் பயன்பெறும் கூட்டுக் குடிநீர் திட்டம் மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

- **இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா திருநாமத்தின் பெயரில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வள பல்கலைக் கழகத்திற்கான** நிர்வாகக் கட்டடம் சுமார் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

- நாகப்பட்டினத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியான **தலைஞாயிறு டாக்டர் எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையக் கட்டடம்** சுமார் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது.

- நாகப்பட்டினம் மாவட்டம், நம்பியார் நகர் கிராமத்தில் ஒரு கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் **மீன் ஏலக்கூடம் மற்றும் மீன் ஏலத்தளம்** கட்டப்பட்டு மீனவர்களின் பயன்பாட்டுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

- காமேஸ்வரம், புஷ்பவனம் ஆகிய கிராமங்களில் ஒரு கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வலை பின்னும் கூடங்கள் அமைக்கப்பட்டு, மீனவர்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

- வெள்ளையாற்றின் குறுக்கே **செர்துூர்–வேளாங்கன்னி சாலையில் 15** கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு உயர்மட்டப் பாலம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

- வெள்ளப்பள்ளம் உப்பனாரையும், எடமணல் மற்றும் திருநகரியையும் இணைக்கும் பாலம் ஒன்று சுமார் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு மக்களின் பயன்பாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- திருமுல்லைவாசலில் சுமார் 9.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன் இறங்கு தளம் ஒன்று அமைக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

- மணல்மேடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 7.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

- வேளாங்கன்னி, நரிமணம், நாகப்பட்டினம் நகர் உள்ளிட்ட இடங்களில் சுமார் 23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டு சீரான மின்சார வசதியை இந்த மாவட்ட மக்களுக்குத் தந்திருக்கின்றோம்.

- நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், எருக்கூர் கிராமத்தில் 64 கோடியே 27 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 50,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 16 நெல் சேமிப்பு சைலோ கொள்கலன்கள் அமைக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

- நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், மாணிக்கப்பங்கு கிராமத்தில் 14 கோடியே 89 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தலா 5,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டுக்கு கொடுக்கப்பட்டுள்ளன.

- உணவு தானியங்களை முறையாக சேமித்து வைக்கும் வகையில் புதிதாக கிடங்குகள் கட்டப்படும் என்று அறிவித்ததற்கு இணங்க, தரங்கம்பாடி வட்டம், கிடாரங்கொண்டான் கிராமத்தில் 2 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தலா 1000 மெட்ரிக் டன் கொள்ளளவில் 2 சேமிப்பு கிடங்குகள் மாண்புமிகு அம்மாவின் அரசு கட்டி விவசாயிகளின் பயன்பாட்டுக்கு கொண்டு வந்தது.

இது தவிர **இன்று நடைபெறும் இந்த விழாவில்**,

மீன் வளத் துறையின் சார்பில் 178 கோடி ரூபாய் மதிப்பிலான பூம்புகார் மீன்பிடி துறைமுகம் உட்பட மொத்தம் 334 கோடியே 88 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 66 பணிகளை நான் **துவக்கி வைத்துள்ளேன்.**

புதிய மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டியது உட்பட, 394 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 14 பணிகளுக்கு இன்றையதினம் உங்கள் முன் நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

அதே போல, 14,861 பயனாளிகளுக்கு சுமார் 101 கோடியே 18 லட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை இன்று நான் வழங்க உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த மூன்று ஆண்டுகளாக மாண்புமிகு அம்மாவின் அரசு, பல்வேறு தரப்பினரிடமிருந்து தினந்தோறும் வரும் சவால்களையும், எதிர்ப்புகளையும் எதிர்கொண்டு, அவைகளை சமாளித்து, மக்களின் சேவையே மகேசன் சேவை என எண்ணி, பல மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி சாதனை புரிந்துள்ளது. அதன் பயனாக மாண்புமிகு அம்மாவின் அரசு, மக்களுக்கான அரசு என பொதுமக்களின் பாராட்டைப் பெற்றுள்ளது.

வாழ்க்கையில் நாம் சந்திக்கும் சவால்களும், கஷ்டங்களும் தான் நம்முடைய தரத்தை, மதிப்பை உயர்த்துகின்ற அம்சங்களாகும். இதனை நினைக்கையில் எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

பசுவின் பாலுக்கு ஒரு பெரிய வருத்தம். பசுவின் அடிவயிற்றில் நான் இருந்தேன். என்னை ஒரு பாத்திரத்தில் ஊற்றினார்கள். பின்னர், பாத்திரத்தில் ஊற்றி, அடுப்பின் மேல் வைத்து சூடாக்கினார்கள். எனக்கு சூடு தாங்கவில்லை. பசுவின் அடிவயிற்றில் பத்திரமாக இருந்த எனக்கு இப்படி ஏன் ஒரு சோதனை என்று எண்ணி வருந்தினேன். பொங்கிய நிலையில் நான் அடுப்பிலிருந்து இறக்கி வைக்கப்பட்டேன். நேரமாக, நேரமாக மோர் என்னோடு சேர்க்கப்பட்டது. இது என்ன புது தண்டனை என வருத்தப்பட்டேன். அதன் பிறகு யாரும் என்னைப் பற்றி கவலைப்படவில்லை. திரவமாக இருந்த நான் திடமாக மாறிப் போனேன். எனக்கு தயிர் என்று புதிய பெயர் வைத்தனர். அத்துடன் மட்டும் நிறுத்தவில்லை, என்னை ஒரு பானையில் ஊற்றி, மத்து கொண்டு கடைய ஆரம்பித்தார்கள். நான் மறுபடி மோர் என்ற திரவமானேன். என்னுள் இருந்து ஒரு திடப் பொருளை வரவழைத்து, அதற்கு வெண்ணெய் என்று பெயர் வைத்தார்கள். '**பட்டர்**' என்ற பெயரைக் கேட்டதும், அப்பாடா இனியாவது என் வாழ்க்கை **பெட்டர்** ஆகுமா

என்று ஏங்கினேன். ஆனால், அந்த வெண்ணெயை, மறுபடி அடுப்பில் வைத்து உருக்கினார்கள். எனக்கு நெய் என்று இன்னொரு புதுப் பெயரை வைத்தார்கள். உருக்கிய நெய்யை ஒரு ஜாடியில் ஊற்றி, அந்த வீட்டின் ஜன்னலுக்கு பக்கத்தில் வைத்தார்கள்.

பாலாக இருந்த நான், பட்ட கஷ்டங்களையும், இப்போதுள்ள நிலைமையையும் நினைத்தபடியே இருந்த நேரத்தில், ஜன்னலுக்கு வெளியே இரண்டு பேர் பேசிக் கொண்டு செல்வதை கேட்டேன். நம் ஊர்லே **பால் அரை லிட்டர் 18 ரூபாய்** என்றும், **நெய் விலை 250 ரூபாய்** என்றும் அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். இதைக் கேட்ட நான் ஆச்சரியப்பட்டேன். **பாலாக இருந்தபோது** என் மதிப்பு **வெறும் 18 ரூபாய்தான்.** ஆனால் பல கஷ்டங்களை அனுபவித்து **நெய்யான பிறகு** என் மதிப்பு **250 ரூபாயாக** கூடிவிட்டதே. இதை நினைக்கும்போது நான் பட்ட கஷ்டங்கள் எல்லாம் எனக்கு ஒரு பொருட்டாக தெரியவில்லை என்றது அந்த நெய்.

சாதனை படைத்தவர்கள் அனைவரும் சோதனைகளை சந்தித்து அதனை சாதனையாக மாற்றியவர்கள்தான். அது போன்று மாண்புமிகு அம்மாவின் அரசு பதவியேற்றது முதல் பல தரப்பிலிருந்து வந்த சவால்களையும், அவர்களால் கொடுக்கப்பட்ட நெருக்கடிகளையும், சோதனைகளையும் சந்தித்தபோதும், பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றிட வேண்டும் என்று, மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டதனால், இன்று அனைத்து தரப்பு மக்களின் பேராதரவினைப் பெற்று, நான்காவது ஆண்டில் காலடி எடுத்து வைத்து அனைவரது பாராட்டுகளையும் எங்களுடைய அரசு பெற்று உயர்ந்துள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களுடைய மாவட்ட அமைச்சர் அவர்களும், இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களும் பல்வேறு கோரிக்கைகளை வைத்தார்கள். நீங்கள் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு வருகின்ற போது எங்கள் மாவட்டத்திற்கு தேவையான திட்டங்களை அறிவிக்க வேண்டும். நாகப்பட்டினம் மாவட்ட மக்களின் பிரச்சனைகளை தீர்க்கின்ற வகையிலே வைத்திருக்கின்ற

கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டார்கள். அதில் சிலவற்றை நிறைவேற்றுவதற்காக அரசின் பரிசீலனையிலே இருக்கின்ற அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

<u>அறிவிப்புகள்</u>

1. வேதாரண்யம் வட்டம், வண்டுவாஞ்சேரி கிராமத்தில் **வேளாண் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படும்.**

2. மயிலாடுதுறை வட்டத்தில் 72 லட்சம் ரூபாய் செலவில் **ஒரு நூலகம் அமைக்கப்படும்.**

3. வேதாரண்யம் ஏரியில் **தடுப்புச் சுவர் மற்றும் நடைபாதையுடன் கூடிய ஒரு பூங்கா அமைக்கப்படும்.**

4. வேதாரண்யம் வட்டம், கைலவனம்பேட்டை கிராமத்தில் **கஜா புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு** 49 கோடி ரூபாய் மதிப்பீட்டில் **அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்படும்.**

5. அதே போன்று, **கஜா புயலினால் பாதிக்கப்பட்ட** அகஸ்தியன்பள்ளி கிராமங்களில் 29.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் **அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்படும்.**

6. மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் வட்டங்களுக்கு **புதிய வட்ட அலுவலகங்கள் அமைக்கப்படும்.**

7. நாகப்பட்டினம் மாவட்ட தலைமையிடத்தில் உள்ள **அரசு விருந்தினர் மாளிகைக்கு கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும்.**

8. அதே போல, **மயிலாடுதுறை கோட்ட தலைமையிடம்** மற்றும் **வேதாரண்யம் வட்டத்தில்** உள்ள **அரசு விருந்தினர் மாளிகைகளுக்கு கூடுதல் கட்டடங்கள் ஏற்படுத்தப்படும்.**

9. சீர்காழி வட்டம், திருமுல்லைவாசல் கிராமத்தில் மீன்பிடி துறைமுகத்தில் **கடல் அரிப்பு தடுப்புச் சுவர்** மற்றும் **தடுப்புச் சுவர் கட்டப்படும்.**

10. **மயிலாடுதுறை** வட்டத்தில் உள்ள **தீயணைப்புத் துறை அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டப்படும்.**

11. வேதாரண்யம் வட்டம், **கள்ளிமேடு கொத்தங்காடு சாலையில் வேதாரண்யம் கால்வாயின் குறுக்கே ஒரு உயர்நிலை பாலம் கட்டப்படும்.**

12. நாகப்பட்டினம் வட்டம், தேவநதி ஆற்றின் குறுக்கே **கடைமடை கதவணை அமைக்கப்படும்**

- நாகப்பட்டினம் மாவட்டம் தெற்கு பொய்கைநல்லூர் கிராமத்தில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் அரிசி சார்ந்த உணவுப் பொருட்கள் மற்றும் கடல்வாழ் உயிர் உணவு பதப்படுத்தும் தொகுப்பு அமைத்துக் கொடுக்கப்படும்.

- மிகப்பெரிய திட்டமாக, விவசாயிகளின் கனவுத் திட்டமாக, விவசாயிகளுக்கு இரட்டிப்பு வருமான கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே எங்களுடைய அரசு வேதாரண்யம் தாலுக்காவில் 250 ஏக்கர் பரப்பளவில் ஒரு மிகப்பெரிய உணவு பதப்படுத்தும் பூங்கா அமைத்துக் கொடுக்கப்படும்.

- மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மகப்பேறு கட்டடம் கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ளது. அங்கே சிடி ஸ்கேன் வழங்கப்பட்டு இருக்கிறது. அதேபோல புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு அனைத்து சிறப்பு சிகிச்சை பிரிவுகளும் மயிலாடுதுறையில் அமைத்துக் கொடுக்கப்படும்.

- சீர்காழி அரசு மருத்துவமனையை தரம் உயர்த்தி கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

மேலும், இந்த மாவட்டத்தின் அமைச்சர் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்களும், இந்த மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களும் நீண்ட நாட்களாக மாண்புமிகு அம்மா அவர்களிடம் கோரிக்கை வைத்தார்கள். துரதிஷ்டவசமாக அம்மா மறைந்து விட்டார்கள். அம்மாவின் மறைவிற்கு பிறகு, நான் என்று முதலமைச்சர் ஆனேனோ அன்றிலிருந்து இன்று வரை என்னிடமும், இந்த மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நீங்கள் நிறைவேற்றி தர வேண்டும் என்று பலமுறை உரிமையோடு கோரிக்கை வைத்தார்கள்.

**அதன்படி, நாகப்பட்டினம் மாவட்டத்தை பிரித்து, மயிலாடுதுறையை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் தோற்றுவிக்க அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கின்றேன்.**

இதனால் நாகப்பட்டினம் மாவட்ட அமைச்சர் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் மனநிறைவு பெறுவார்கள் என்று நான் கருதுகின்றேன். கொடுப்பதற்காக நடைபெறுகின்ற ஒரே அரசு அம்மாவினுடைய அரசு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்சாரி அவர்களும் கோரிக்கை வைத்ததினால் அவருக்கும் இந்த நேரத்திலே நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன்.

நாகப்பட்டினம் மாவட்டத்தை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்க வேண்டுமென்று வைத்த கோரிக்கையையும் நிறைவேற்றிய அரசு எங்களுடைய அரசு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் நடைபெறுகின்ற அரசு எங்கள் அரசு. அனைத்துத் துறைகளிலும் தேசிய விருதுகளைப் பெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் இரவு, பகல் பாராமல் மக்கள் பணி செய்து அந்தந்தத் துறைகளில் விருதுகளைப் பெறுகின்ற அரசாக எங்களுடைய அரசு திகழ்ந்து கொண்டிருக்கிறது.

மத்திய அரசு, தமிழ்நாடு அரசிற்கு நல் ஆளுமை விருது, தரவரிசையில் முதலிடம் எப்படிக் கொடுத்தார்கள், முதலிடம் கொடுத்தவரை அழைத்து வாருங்கள் நான் அவரை அடிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் சொல்கிறார். அரசு அதிகாரிகள் எவ்வளவு கஷ்டப்பட்டு, எங்களோடு சேர்ந்து பணியாற்றி, முழு மூச்சுடன் செயல்பட்டு, அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்கி, இன்றைக்கு இந்தியாவிலேயே முதல் முறையாக ஆளுமை திறனிலே முதலிடம் பெற்றுள்ளோம். பாராட்ட மனமில்லை என்றாலும் பரவாயில்லை, குறைகூறி பேசாமல் இருந்திருந்தால் சரியாக இருந்திருக்கும்.

பாராட்டியவரை அடிக்க வேண்டும் என்று சொல்கின்ற இவரா எதிர்க்கட்சி தலைவர் ? நீங்களே சொல்லுங்கள் பார்க்கலாம்.

ஒரு விளக்கு எரிந்து கொண்டு இருக்கின்றது என்றால், அதன் திரியை தூண்டி விட்டால் பிரகாசமாக எரியும். அதைப்போல ஒரு அரசுக்கு தூண்டுகோலாக இருந்தால் அந்த அரசுக்கு மேன்மேலும் பல திட்டங்களை இந்த நாட்டு மக்களுக்கு வழங்கி ஒரு சிறந்த அரசாக விளங்கும். அதுதான் எதிர்க்கட்சியின் வேலை. சிறந்த நிர்வாக திறன்மிக்க இந்த அரசை, வேண்டுமென்றே திட்டமிட்டு, கொச்சைப்படுத்தி, பேசுகின்றவரா எதிர்க்கட்சி தலைவர் ? சிந்தித்து பாருங்கள். எவ்வளவு கடின உழைப்பு. இந்தியாவிலேயே முதலிடம் பெற்றிருக்கிறது என்று சொன்னால் அது சாதாரண விஷயமா ?

இன்றைக்கு படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், அறிஞர்கள் எல்லாம், இந்த அரசை பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு தமிழ்நாடு அரசு ஆளுமை திறனிலே முதலிடம் பெறுவதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், உறுதுணையாக இருந்த அரசு அதிகாரிகள் அனைவருக்கும், அதற்கும் மேலாக மக்கள் எங்களுக்கு வழங்கிய நல்ஆதரவுக்கும், நன்றிகளையும், பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

பருவமழை பொய்கின்ற காலங்களில், மேட்டூர் அணையிலே நீர் குறைவாக வருகின்றது. அதனால் குறித்த காலத்திலே டெல்டா பாசன விவசாயிகளுக்கு தண்ணீர் திறந்துவிட முடியாத சூழ்நிலை. ஆகவே, வருகின்ற காலத்திலே இந்த நிலையை எல்லாம் மாற்ற வேண்டும் என்பதற்காக எங்களுடைய அரசு காவேரி கோதாவரி இணைப்பு திட்டம் என்ற அற்புதமான திட்டத்தை நிறைவேற்றுவதற்கு கடும் முயற்சியினை எடுத்துக் கொண்டு இருக்கின்றது. இதற்காக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் ஏற்கனவே கோரிக்கை வைத்தேன். மாண்புமிகு மத்திய நீர்வளத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கோரிக்கை வைத்தேன். அவர்களும் இதற்காக விரிவான திட்ட அறிக்கையை தயாரிக்கப்படுவதாக தெரிவித்தனர். அந்தப் பணிகள் தற்போது விரைவாக நடைபெற்று கொண்டு வருகின்றன. இந்த திட்டத்திற்கு கோதாவரியிலிருந்து தண்ணீர் தெலுங்கானா, ஆந்திரா வழியாக தமிழ்நாட்டிற்கு வர வேண்டும். அந்தப் பணிக்காக மாண்புமிகு ஆந்திரா மாநில முதலமைச்சர்

அவர்களுக்கும், மாண்புமிகு தெலுங்கானா முதலமைச்சர் அவர்களுக்கும் நமது அமைச்சர்கள் மூலமாக கடிதங்கள் அனுப்பி வைத்துள்ளேன். அவர்களும் பரிசீலிப்பதாக சொல்லி இருக்கிறார்கள். விவசாயிகளை நேசிக்கக்கூடிய முதலமைச்சர்கள் தெலுங்கானா முதலமைச்சர் மற்றும் ஆந்திர முதலமைச்சர். மக்களோடு மக்களாக இருந்து விவசாயிகளின் எண்ணங்களை பிரதிபலிக்கின்ற முதலமைச்சராக இருக்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு தெலுங்கானா மற்றும் ஆந்திர முதலமைச்சர்கள் நமக்கு முழு ஒத்துழைப்பு நல்குவார்கள் என்று கருதுகின்றேன். அந்த ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றால், நமது நீண்ட கால பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்து விடலாம். எல்லா காலங்களிலும் நமக்கு தண்ணீர் கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்குவதற்கு எங்களுடைய அரசு தொடர்ந்து முயற்சி எடுத்து கொண்டு இருக்கிறது. ஆகவே, டெல்டா பாசனத்தில் இருக்கின்ற நாகப்பட்டினம் மாவட்ட விவசாயிகளும் சரி, டெல்டா பாசன விவசாயிகளும் சரி, குறித்த நேரத்தில் உரிய தண்ணீர் கிடைக்க எங்களுடைய அரசு கோதவரி – காவேரி இணைப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்த பாடுபடுவோம், பாடுபடுவோம், நிச்சயமாக வெற்றி பெறுவோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு நீர் ஆதாரம் தான் மிக மிக முக்கியம். நீர் இல்லாவிட்டால் விவசாயம் செழிக்காது. அதுமட்டுமல்ல, விவசாயத்தை நம்பித் தான் விவசாய தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். லட்சக்கணக்கான விவசாய தொழிலாளர்களின் நிலையை நாங்கள் அறிந்திருக்கின்றோம். நான் விவசாயியாக இருக்கின்ற காரணத்தினாலே விவசாயத்தை பற்றி முழுமையாக தெரியும். அதேபோல, விவசாயிகள் படுகின்ற துன்பங்கள், பிரச்சனைகள் அனைத்தையும் தீர்க்க எங்களுடைய அரசு பாடுபட்டு கொண்டு இருக்கின்றது. அதற்காக நீர் மேலாண்மை என்ற திட்டத்தை துவங்கி இருக்கின்றோம். இந்த திட்டத்தின் மூலமாக எங்களுடைய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பருவகாலங்களிலே பெய்கின்ற மழைநீர் ஒரு சொட்டு நீர் கூட வீணாகாமல் அனைத்தையும் ஆங்காங்கே தேக்கி வைத்து, நிலத்தடி நீரை உயர்த்துவதற்காக எங்களுடைய அரசு புதிய கொள்கை வகுத்து நடைமுறைப்படுத்தி கொண்டு இருக்கிறது.

இந்த விழா சிறப்பாக அமைய, குறுகிய காலத்திலே மிகச் சிறப்பாக ஏற்பாடுகளை செய்திருக்கிறீர்கள். ஆகவே, நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு புதிய மருத்துவக் கல்லூரி வருவதற்கு என்னோடு துணை நின்ற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களுக்கும், அவருக்கு துணையாக இருந்த துறையினுடைய செயலாளர் அவர்களுக்கும், அதோடு, இந்த நிலம் எடுப்பதற்கு துணையாக இருந்த வருவாய் துறை அமைச்சர், மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய் துறை அதிகாரிகள், பொதுப்பணி அதிகாரிகள், பல்வேறு துறைகளின் அதிகாரிகளுக்கும் இந்த நேரத்திலே நன்றி பாராட்ட கடமைப்பட்டு இருக்கின்றேன்.

எல்லோரும் சேர்ந்து, குறித்த காலத்திலே, உரிய முறையிலே நடவடிக்கைகளை மேற்கொண்டதன் விளைவாக, ஒரே ஆண்டில் 11 அரசு மருத்துவக் கல்லூரிகளை பெற்று வரலாற்று சாதனை படைத்த அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்ற பெருமையை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, நாம் கேட்ட உடனே, நமக்கு எந்தவொரு மறுப்பும் இல்லாமல் இன்றைக்கு தமிழகத்திலே 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளை வழங்கிய மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷ் வர்தன் அவர்களுக்கும், மத்திய சுகாதார இணை அமைச்சர் அவர்களுக்கும், மத்திய சுகாதாரத் துறை அதிகாரிகளுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்து, நாளையதினம் உலக மகளிர் தினம். இந்த உலக மகளிர் தினத்தில் பெண்கள் அனைவரும் எல்லா வளமும் பெற்று செழித்து வாழ வேண்டும் என்று வாழ்த்தி, விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

நன்றி!

வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**